# மாவட்டச் செயலகம் –மன்னார்

## 1. மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபரின் செய்தி

2012ம் ஆண்டுக்குரிய மன்னார் மாவட்ட செயலகத்தின் கணக்கறிக்கையின் அடைவு தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிப்பதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்துடன் இவ்வறிக்கையானது மன்னார் மாவட்ட செயலகம், ஐந்து பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் அமைச்சுக்களின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் திறமையான செயல்பாடுகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இச்செயற்பாடுகளுக்கான நிதியானது 2012ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இந்நிதியானது சிக்கனமாகவும் திறனான முறையிலும் பயன்படுத்தப்படல் வேண்டுமெனும் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகளின் பிரதிபலன்களாக பொதுமக்கள் இலகுவான முறையிலும் மிக துரிதமாகவும் அரசின் சேவைகளை பெற்றுக் கொள்ள முடிகின்றது. இச்சேவையானது, அனைத்து திணைக்களங்களின் கிளைகள் மற்றும் பிரதேச செயலகங்கள் அனைத்தும் மாவட்ட செயலகத்துடன் இணைந்து மிகவும் பலமான முறையில் செயல்பட வழிவகுக்கின்றது.

மேலும் மகிந்த சிந்தனையில் அடங்கும் திவிநெகும திட்டமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக திருப்தியான முறையில் முன்னெடுக்கப்படும் திட்டமாகும். இதனைவிட ஏனைய வரிசைப்படுத்தப்பட்ட அமைச்சுக்களின் கீழ் ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டின் கீழ் குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் பயனுள்ள முறையில் மன்னார் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதும் குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

இறுதியாக இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் இச்செயற்பாடுகளுக்காக, பொதுமக்களின் தொழில் முன்னேற்றத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் உதவி நல்கியவர்களுக்கும், இம்மாவட்டத்தின் மக்களின் அபிவிருத்தி செயல்பாடுகளில் பங்கு பற்றியவர்களுக்கும், மற்றும் இதனைத்தவிர, மக்களுக்கு மிகவும் தரமானதும் பயனுள்ளதுமான சேவையை வழங்க பல வழிகளிலும் அறிவுரை வழங்கியவர்களுக்கும், மேலும் எனது சேவைக்கூடாகவும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் திணைக்களங்கள் வழங்கிய அறிவுரைகள் என்பவையும் மக்களுக்கு திறமையானதும் பயனுள்ளதும் தரமானதுமான சேவையை வழங்க பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் நான் இம்மாவட்டத்தின் அலுவலகங்களினது முழு ஒத்துழைப்பினையும் உதவியினையும் பெற்றுக் கொள்ளாவிடின் இந்த அளவிற்கு முன்னேற்றங்களினது கண்காணிப்பினை மேற்கொள்ள இயலாதிருந்திருக்கும். எனவே தொடர்ச்சியாகவும் வினைத்திறனுடனும் எல்லா விடயங்களிலும் ஒத்துழைப்பு வழங்கி வரும் இவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பது எனது தலையாய கடமையாகும்.

நன்றி!

## 2. மாவட்டச் செயலகம் பற்றிய அறிமுகம்

### 2.1 குறிக்கோள்

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல்.

### 2.2 நோக்கு

மாவட்ட பிரதேச மட்டத்திலான நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து அவதானத்துடனும் சிரத்தையுடனும் விரைந்து குறைந்த செலவில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதும் இதனால் மக்களினதும் அரசாங்கத்தினதும் எதிர்பார்ப்புகளிற்கு அமைவாக மாவட்டத்தின் தேவைகளை திறமைமிக்க சேவை மூலம் பூர்த்திசெய்வதாகும்.

### 2.3 எதிர்பார்ப்பு மற்றும் செயலக நடவடிக்கைகள்

**மாவட்டச் செயலக முறைகள், பயன்பாடுகள், வினைத்திறன், மற்றும் விளைதிறன் (உற்பத்தித் திறன்)**

- மாவட்ட மற்றும் பிரதேச மட்டச் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள்

ஊழியர்கள்/ உத்தியோகத்தர்களின் அனைத்து கடமைகளும் அது தொடர்பான நடவடிக்கைகள் (சுயவிபரக் கோவை, விடுமுறைகள், சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை நாட் கொடுப்பனவு, ஊழியர்களின் புகையிரத ஆணைச்சிட்டு, கடன் மற்றும் ஏனைய நடவடிக்கைகள்)

- பின்வரும் சேவைகளை மக்களுக்கு வழங்குவது அல்லது ஏனைய நிறுவனங்கள் மூலம் சேவைகளை பெற்றுக்கொள்ள இணைப்பினை ஏற்படுத்துதல்.

- ✓ கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, வியாபார பதிவுச்சான்றிதழ், பிறப்பு இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ், மோட்டார் போக்குவரத்து இறைவரி அனுமதிப்பத்திரம்
- ✓ பாதை அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள்
- ✓ தேருநர் இடாப்பு பராமரித்தல் மற்றும் வழங்குதல்
- ✓ காணிக்கான உறுதிகள் மற்றும் காணி பிணக்குகளை தீர்த்து வைத்தல்
- ✓ வயோதிபர்களுக்கான கொடுப்பனவுகளை ஒதுக்கீடு செய்து வழங்குதல்

- ✓ உளவியல் ரீதியாகவும், மனோ ரீதியாகவும் பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் உடல் நலத்திற்கும் ஆலோசனை வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ✓ பெண்களை தலைவர்களாக கொண்ட குடும்பங்களுக்கு பயிற்சி மற்றும் ஊக்குவிப் புக்களை வழங்குதல்

**நிதி நடவடிக்கைகள் மற்றும் பரிமாற்றல் நடைமுறைகள் மூலம் எழுச்சிக்குள்ளாக்கி இலக்குகளை அடையும் மேலதிகமான செயல் பணிகள்**

- ✓ வினைத்திறமையுடன் (அனுமதியுடன் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம்) செலவினங்களை மேற்கொள்ளலும் கணக்கு வைத்தலும்
- ✓ ஊழியர்களுக்கான எல்லாவித கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுதல்
- ✓ கச்சேரியின் நானாவித வைப்புகளிலிருந்து நிதிப்பகிர்வு மற்றும் உரிய கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல்
- ✓ மாதாந்த, வருடாந்த கணக்குகள் மற்றும் ஏனைய கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய திணைக்களங்களுக்கும், பொது திறைசேரிக்கும் அனுப்பி வைத்தல்.
- ✓ ஓய்வூதியம் மற்றும் இதனோடு இணைந்த அனைத்து கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுதல்.
- ✓ மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் வழங்கல், சேவைகள் ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.
- ✓ வருடத்திற்கான கொள்ளல் திட்டங்களை தயாரித்தல், வருடாந்த சுற்றாய்வுகளை (பொருட்கணக்கெடுப்பு) மேற்கொள்ளுதல்.

**கலை கலாச்சார பண்புகளையும், விழுமியங்களையும் அதன் உயர் மதிப்புகளையும் ஊக்குவிக்கும் அமைப்பு நடவடிக்கைகள்**

மாவட்ட கலாச்சார, விளையாட்டு நிகழ்வுகள், தேசிய மட்ட, மாவட்ட மட்ட, விழாக் கொண்டாட்டங்களில் ஈடுபடுதல்.

**மாவட்ட வளங்களை பயன்படுத்தி வினைத்திறனுள்ள பயன்பாட்டுடன் திட்டங்களை வடிவமைத்தல்**

இதன் முழுமையான நடவடிக்கைகள் மாவட்ட திட்டமிடல் கிளையின் மூலமும், காணி பகிர்வு பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் மூலமும், மாவட்ட விவசாய அலகு மற்றும் அறிமுக அபிவிருத்தி கிளைகள் மூலமும் பூர்த்தி செய்யப்படுகின்றன.

**பொது மக்களை அனர்த்தத்திலிருந்து பாதுகாத்தல்**

இயற்கை அனர்த்தங்களிலிருந்து பொது மக்களை பாதுகாத்தல் (வெள்ளம், மண்சரிவு, வரட்சி) அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பங்களிப்புடன் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஆரம்ப வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

**மாவட்டத்தின் அடிப்படை புள்ளி விபரங்களை சேகரித்தலும் பராமரித்தலும்**

மாவட்டத்தின் புள்ளிவிபரக்கிளையின் மூலம் புள்ளி விபர நிகழ்வு பூர்த்திசெய்யப்படுகின்றது.

**பிரதேச மட்டத்திலான நிலையான அபிவிருத்திகள்**


பிரதேச மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளின் பேரில் திட்டமிடுதலும் இயல்பு நடவடிக்கைகளும்.

1. வீதிகள், நீர்பாசனம் மற்றும் மின்சார வசதிகள் தொடர்பான அபிவிருத்திகள்
2. பன்முகப்படுத்தப்பட்ட பாதீடுகள் மூலம் கிடைக்கப்பெறும் நிதி மூலத்தின் மூலம் மாவட்டத்திற்கான அபிவிருத்திகளை மேற்கொள்ளும் பொருட்டான நிதி பங்கீடும் வினைத்திறன் மிக்க கண்காணிப்பும்.
3. அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் (திவிநெகும, கமநெகும மற்றும் மகநெகும)
4. வீடமைப்புத்திட்டங்களுக்கான வசதிகளை ஒழுங்கு செய்து வழங்குதல்
5. போரினால் பாதிப்படைந்த மக்களுக்கு நட்டஈடு வழங்குதல்

## 03. மாவட்டம் பற்றிய அறிமுகம்

### ➢ மாவட்டத்தின் எல்லைகள்:

மன்னார் மாவட்டமானது இலங்கையின் வடமேற்கு திசையில் அமைந்துள்ளது. இம் மாவட்டமானது, இலங்கைத் தீவின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இம்மாவட்டமானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்களினால் சூழப்பட்டுள்ளது. இது சிறு கரையோரப் பாதை மூலம் நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது பரப்பளவானது 2002 சதுர கிலோ மீட்டராகும் ஆகும். ஐந்து பிரதேச செயலக பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன, மன்னார், நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகும்.




### ➢ மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம்:

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல அம்சங்களை மன்னார் மாவட்டம் கொண்டுள்ளது. திருக்கேதீஸ்வரத் திருத்தலம், மடு மாதா தேவாலயம், மன்னார்கோட்டை, அரிப்புக்கோட்டை, அரிப்பு அல்லி ராணிக்கோட்டை, ராமர் பாலம், தொங்குபாலம், வெளிச்சவீடு மற்றும் பெருக்குமரம் (Biobap Tree) போன்ற அதிசயங்கள் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன.



திருக்கேதீஸ்வரம் கோயில்

ஈழத்து சிவாலயங்களுள் வரலாற்று புகழ் மிக்கதாகவும், 7ம் 8ம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களால் பாடல் பெற்ற பெருமைக்குரியதாகவும் திகழ்ந்து வருகின்றது. மன்னாரிலிருந்து தென் திசையாக சுமார் 6.5 மைல் தூரத்திலும், வடமேல் கடலோரத்திலிருந்து சுமார் 0.5 மைல் தூரத்திற்கப்பாலும் திருக்கேதீஸ்வர திருத்தலம் அமைந்துள்ளது. 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரினால் முழுமையாக அழிக்கப்பட்டது. மீண்டும் 1903ம் அண்டு மீளமைக்கப்பட்டது 1ம் கும்பாபிஷேகம் 1952ம் ஆண்டு இடம்பெற்றது.



மடு திருத்தலம்

வன்னிக்காட்டில் அமைந்துள்ள மடுத்திருத்தலம் வரலாற்றுப் பூர்வீகமானது என்பதில் எவ்வித கருத்து வேறுபாட்டிற்கும் இடமில்லை. வரலாற்றுக் குறிப்பின் படி 1659ம் ஆண்டு மாசி மாதம் 22ம் திகதி மன்னார் டச்சு ஆட்சியின் கைப்பற்றலில் வீழ்ந்த பொழுது பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதன் பொருட்டு மாந்தை நகரிலிருந்து வன்னிக்காட்டிலுள்ள குளத்தை அண்டி ஆரோக்கிய அன்னையின் சுருபத்தோடு குடியேறியதே இத்திருத்தலம் ஆகும்.




பெருக்க மரம்

மன்னாரின் பிரபல்யத்திற்கு காரணமான பெருக்க மரம் அரேபிய வியாபாரிகளினால் 15ம் நூற்றாண்டிற்கு முன்னர் கொண்டுவரப்பட்டது. மன்னார் பள்ளிமுனையில் காணப்படும் இப் பெருக்க மரமானது 7.5மீட்டர் உயரத்தினையும் 19.51 மீட்டர் சுற்றளவினையும் கொண்டது. இவ் மரமானது சுமார் 750 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. வியாபார நோக்கத்திற்காக இங்கு வந்த அரேபியர்களின் உணவுத் தேவையை இது பூர்த்தி செய்தது. நீள்வட்ட வடிவ பழத்தினையும் கொண்டது.



அல்லிராணிக் கோட்டை

இவ் அல்லிராணி கோட்டையானது மன்னார் நகரிலிருந்து சுமார் 45km தூரத்தில் உள்ள முத்தரிப்புத் துறையில், அமைந்துள்ளது. அக்கோட்டையிலிருந்து மாதோட்டத்திற்கான ஒரு சுரங்கப் பாதை இருப்பதாக நம்பப்படுகின்றது. கோட்டையின் பல பகுதிகள் கடலரிப்பினால் அரிக்கப்பட்டுள்ளதுடன் அடையாளச்சுவடுகள்




மாத்திரம் மிச்சமாக உள்ளது. இக் கோட்டையின் கீழ் தளத்தில் சிறிய 4 படுக்கை அறைகளும் 1ம் மாடியில் மிகப் பெரிய சாப்பாட்டு அறையும் சிறப்பான படுக்கை அறை ஒன்றும் காணப்படுகின்றன. டொரிக் என்பவரால் இக்கோட்டையின் வரைபடம் வரையப்பட்டு அவரின் மேற்பார்வையின் கீழ் கட்டப்பட்டது.


தொங்கு பாலம்

இத்தொங்கு பாலமானது 1935ம் ஆண்டு அருவியாற்றைக் கடப்பதற்காக அமைக்கப்பட்டது. இப்பாலமானது மதவாச்சி மன்னார் வீதியிலுள்ள மடுச்சந்தியிலிருந்து அதனையொட்டியதாக குஞ்சுக்குளம் என்னும் கிராமத்தில் உள்ளது. இப்பாலத்தின் நீளம் 150m அகலம் 1.2m ஆகும். மழைக்காலத்தில் இப்பாலத்தின் மேலாக நீர் பாய்வதுடன் கிராமத்தினையும் ஊடறுத்து நீர் பாயும் எனவும் கூறப்படுகின்றது. மக்கள் இப்பாலத்தினை ஒரு பொழுது போக்கிடமாக பாவனை செய்து மகிழ்கின்றார்கள்.


அரிப்புக் கோட்டை

இக்கோட்டையானது போர்த்துக்கேயரால் கட்டப்பட்டதுடன் 1658ம் ஆண்டு ஒல்லாந்தரினால் கைப்பற்றப்பட்டது. இது ஆங்கிலேய கப்பல் தளபதியான றோபட்நொக்ஸ் என்பவரிடமிருந்து 2ம் ராஜசிங்கனால் 1659ம் ஆண்டு கைப்பற்றப்பட்டது. இலங்கையின் 'பெற்றிக் நோத்'' என்பவரின் ஆட்சிக்காலத்தில் உத்தியோகத்தரின் சுற்றுலா விடுதியாக மாற்றப்பட்டது.


வெளிச்ச வீடு

இவ்வெளிச்ச வீடானது 1915ம் ஆண்டு கட்டப்பட்டது. இது 64 அடி உயரத்தினை கொண்டது. இவ்வெளிச்சவீட்டின் வெளிச்சமானது ஒவ்வொரு 5 செக்கனிற்கும் வெளிச்சத்தைக் கொடுப்பதுடன் இதன் ஒளியானது 10 கடல் மைல் தொலைவு வரையும் தென்படும் என கூறப்படுகின்றது. இது மன்னாரின் வடமேல் திசையிலுள்ள தலைமன்னாரில் அமைந்துள்ளது. தலைமன்னாரிலுள்ள துறைமுகம் ஊடாக இந்தியாவிற்கு பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளுக்கு உதவியாகவுள்ளது.









இக்கோட்டையானது மன்னார் நகரில் போர்த்துக்கேயரினால் 1560ம் ஆண்டில் கட்டப்பட்டது. இது 4 பக்கங்களிலும் பாதுகாப்பு சுவரினால் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதில் 3 பக்கங்கள் பாதுகாப்பு அரணாகவும் ஒரு பக்கம் போர்க்காலத்தில் போர் வீரர்கள் கடலூடாகத் தப்பிச் செல்லக் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோட்டையானது பின்னர் ஒல்லாந்தரின் கடற்படைத் தளமாக மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டது.









இப்பாலமானது மணல் மற்றும் சுண்ணக்கல்லை கொண்டு இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் முகமாக அமைந்துள்ளது. இப்பாலமானது தமிழில் ராமர்பாலம் எனவும், ஆங்கிலத்தில் அடம்ஸ் பாலம் எனவும், மலையாளத்தில் ராமசேது பாலம் எனவும் அழைக்கப்படுகின்றது. இது 30km நீளத்தினையும் 1.5m-3.5m நீர்மட்டம் உடைய மணல் திட்டையும் உடையது. வரலாற்று ரீதியான பதிவுகளைப் பார்க்கும் போது 15ம் நூற்றாண்டில் இப்பாலத்தினூடாக மக்கள் போக்குவரத்தினை மேற்கொண்டுள்ளார்கள் என கூறப்படுகின்றது.




இக்கிறிஸ்தவ தேவாலயமானது 18ம் நூற்றாண்டுக்கு முன் வெற்றிமண் (பேசாலை) குடியிருப்பில் அமைக்கப்பட்டது. பின்னர் 2004ம் ஆண்டு மீளப்புனரமைக்கப்பட்டது. 17,000 சதுர அடி தள பரப்பினைக்கொண்ட மிகவும் பழமை வாய்ந்த கிறிஸ்தவ தேவாலயமாக உள்ளது.

- **மாவட்டத்தின் காலநிலை**

மன்னார் மாவட்டமானது ஒரு உலர் வலய பிரதேசமாகவும், கூடிய வெப்பநிலையை உடைய மாவட்டமாகவும், குறைந்த அளவு மழைவீழ்ச்சி உடைய மாவட்டமாகவும் காணப்படுகின்றது. மாவட்டத்தின் வெப்பநிலை எல்லையானது 28c-33c ஆகவும், சராசரி மழைவீழ்ச்சியானது 74mm-104mm ஆகவும் காணப்படுகின்றது.

- **மாவட்டத்தின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம்**

மன்னார் மாவட்டத்தின் பிரதான வாழ்வாதாரங்களாக விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு என்பன காணப்படுகின்றது. இதில் 70% விவசாயத்திலும், 25% மீன்பிடியிலும், 5% மக்கள் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். மேலும் பொதுவாக 61.4% மக்கள் நெற்செய்கையிலும் ஈடுபடுகின்றனர்.

மேலும் பொருளாதார செயற்பாடுகளில் ஆண்களுடைய பங்களிப்பு 70.5% ஆகும். 35-39 வயதுடைய ஆண்களும், 25-29 வயதுடைய பெண்களும் தொழிலில் ஈடுபடுகின்றனர். 5 % வேலையில்லாதோர் காணப்படுகின்றனர்.

- **மாவட்டத்தின் நீர்ப்பாசன முறை**

✓ **தேக்கம் அணைக்கட்டு** :

இது மல்வத்து ஓயாவுக்கு குறுக்காக அமைக்கப்பட்டு இரு வாய்க்கால்களுக்கு ஊடாக நீர் திறந்து விடப்படுகின்றது. அதில் ஒரு கால்வாய் கட்டுக்கரைக்குளத்திற்கும் மற்றைய கால்வாய் அகத்திமுறிப்புக்குளத்திற்கும் பாயவிடப்படுகின்றது. மேலதிக நீரானது அருவியாறு ஊடாக கடலினை அடைகின்றது.

✓ **கட்டுக்கரை குளம்**:

1969 ம் ஆண்டு நீர்பாசனத்திணைக்களத்திற்குள் உள்வாங்கப்பட்டது. இக்குளத்திற்கான நீரானது 16.25 மைல் நீளமான அருவியாற்றினூடாக வந்தடைகின்றது. இக்குளத்தின் நீளம் 4.5 மைலாகும். 31,500 ஏக்கர் அடி நீர் உள்ளது. 30,000 ஏக்கர் வயல் காணிகளுக்கு நீர் பாய்ச்சப்படுகின்றது. 10 வாண் கதவுகளைக் கொண்டுள்ளது.

மேலும் வியாயாத்திக்குளம், அகத்திமுறிப்புக்குளம் போன்ற குளங்களிலிருந்தும் சிறு குளங்களுக்கு நீர் அனுப்பிவைக்கப்படுகின்றது.



அருவி ஆறு


• கட்டுக்கரைக்குளம்


தேக்கம் அணை


### பிரதேச செயலகவாரியாக சனத்தொகை

| பிரதேச செயலகங்களின் விபரம் | மொத்த சனத்தெகை |
|---|---|
| மன்னார் | 50,931 |
| நானாட்டான் | 17,844 |
| முசலி | 8,009 |
| மாந்தை மேற்கு | 14,630 |
| மடு | 7,631 |
| **மொத்தம்** | **99,051** |




### பிரதேச செயலகவாரியாக பரப்பளவு

| பிரதேச செயலகங்களின் விபரம் | பரப்பளவு | |
|---|---|---|
| | சதுர Km | வீதம் |
| மன்னார் | 226.88 | 11.33 |
| நானாட்டான் | 129.25 | 6.46 |
| முசலி | 474.22 | 23.69 |
| மாந்தை மேற்கு | 658.90 | 32.91 |
| மடு | 512.82 | 25.61 |
| **மொத்தம்** | **2,002.07** | **100.00** |





99,051 எண்ணிக்கையான சனத்தொகையை தற்பொழுது கொண்டுள்ளது. இன ரீதியாக 80,568 தமிழர்களும், 16,087 முஸ்லிம்களும், 394 இந்தியத் தமிழர்களும் 1,961 சிங்களவர்களும் மற்றும் 41 ஏனையவர்களும் வாழுகின்றனர்.

## ➢ மாவட்டத்தின் அடிப்படை புள்ளி விபரங்கள்

| | | |
|---|---|---|
| ✓ மாவட்டத்தின் பெயர் | : | மன்னார் |
| ✓ மாகாணத்தின் பெயர் | : | வட மாகாணம் |
| ✓ மொத்த நிலப்பரப்பு | : | 2002 km2 |
| ✓ பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை | : | 05 |
| ✓ கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை | : | 153 |
| ✓ கிராமங்களின் எண்ணிக்கை | : | 622 |
| ✓ வாக்கெடுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை | : | 68 |
| ✓ மாநகர சபைகளின் எண்ணிக்கை | : | இல்லை |
| ✓ நகர சபைகளின் எண்ணிக்கை | : | 01 |
| ✓ பிரதேச சபைகளின் எண்ணிக்கை | : | 04 |
| ✓ சுற்று விடுதி, மற்றும் அரச விடுதி | : | 02 (01- தொடர் வேலை), 33 |
| ✓ வலயக்கல்வி பணிமனை அலுவலர்கள் | : | 99 |
| ✓ பாடசாலை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை | : | 80, மற்றும் 1386 ஆசிரியர்கள் |
| ✓ பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | : | 06 |
| ✓ மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை | : | இல்லை |
| ✓ உள்ளூராட்சி அதிகார சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை | : | 46 |
| ✓ சனத்தொகை | : | 99,051 – (கணக்கெடுப்பு 2012) (154,590– பதிவு செய்யப்பட்ட இடம் பெயர்ந்தவர்கள் உட்பட) |

## ❖ அலுவலக ஒழுங்கமைப்பு மற்றும் ஆளணி விபரம்



| வகை | முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கமைய அனுமதித்த ஆளணி விபரம் | பதவி ஆளனி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| மாவட்டச் செயலகம், மன்னார். | | | |
| சிரேஷ்ட நிலை மட்டம் A | 01 | 01 | - |
| மூன்றாம் நிலை மட்டம் B | 06 | 05 | 01 |
| இரண்டாம் நிலை மட்டம் C | 27 | 19 | 08 |
| ஆரம்ப நிலை மட்டம் D | 13 | 10 | 03 |
| தற்காலிகம்/ அமையம்/ ஒப்பந்தம் | | அமையம் - 02<br>ஒப்பந்தம் -01 | |
| பிரதேச செயலகங்கள், மன்னார். | | | |
| மூன்றாம் நிலை மட்டம் B | 25 | 11 | 14 |
| இரண்டாம் நிலை மட்டம் C | 279 | 196 | 83 |
| ஆரம்ப நிலை மட்டம் D | 40 | 26 | 14 |
| தற்காலிகம்/ அமையம்/ ஒப்பந்தம் | | அமையம் - 03<br>ஒப்பந்தம் -07 | |

## 01. பொது நிர்வாக செயற்பாடுகள்

### ➢ நிர்வாக அமைப்பு

இம்மாவட்ட நிர்வாகம் மன்னார் நகரம், நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகிய ஐந்து பிரதேச செயலக பிரிவுகளைக் கொண்டுள்ளது. மாந்தை மேற்கு, மடு, ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் 2011.04.06ம் திகதியிலிருந்து பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என, 1742/07 இலக்க 2012.01.24ம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச வர்த்தமானி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாவட்டம் 153 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டிருந்த போதிலும் 2012ம் ஆண்டில் 116 கிராம அலுவலர்களே கடமையாற்றி வருகின்றனர். மிகுதி 37 கிராம அலுவலர் பிரிவுகள் வெற்றிடங்களாக காணப்பட்டு வருகின்றன. மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள அரச முகாமை உதவியாளர் சேவைக்குரிய தரத்தில் 45 வெற்றிடங்கள் காணப்பட்டு வருகின்றன. அலுவலகப்பணியாளர் சேவை தரத்தில் புதிதாக நியமனம் பெற்ற 02 அலுவலகப்பணியாளர்கள் பிரதேச செயலகங்களுக்கு கடமை இணைப்புச்செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்காக 4117 விண்ணப்பங்கள் “ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள” த்திடமிருந்து உரிய முறையில் பொதுமக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடவுச்சீட்டு பெறுவதற்கு பொதுமக்களிடமிருந்து 609 விண்ணப்பங்கள் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு பிரதேச செயலாளர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

திருமதி. S.மோகநாதன் மேலதிக அரசாங்க அதிபர் அவர்கள் வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து திருமதி. அ. ஸ்ரான்லி டி மெல் அவர்கள் 2012.07.30ம் திகதி மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

2012 ம் ஆண்டில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மூலம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் 2012.06.28, 2012.09.20ம் திகதிகளில் 399 பட்டதாரிகளுக்கு நேர்முகத்தேர்வுகள் நடைபெற்றுள்ளன. இதில் 2012.07.02, 2012.09.20ம் திகதிகளில் 284 பட்டதாரி பயிலுனலுனர்களுக்கு அவர்களது பாட துறைகளுக்கு ஏற்றவாறு பின்வரும் அமைச்சு / திணைக்களங்கள்/ செயலகங்கள் / அதிகாரசபை போன்ற இடங்களுக்கு பட்டதாரி பயிலுனர்களாக நியமனம் வழங்கப்பட்டு, கடமை இணைப்புச்செய்யப்பட்டுள்ளனர்.

| **இல** | **இணைக்கப்பட்டுள்ள பிரிவு** | **எண்** |
|---|---|---|
| 01 | பொருளாதார அமைச்சு | 168 |
| 02 | சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சு | 05 |
| 03 | முன் பிள்ளை பருவ அபிவிருத்தி உதவியாளர் | 02 |
| 04 | ஓய்வூதியத் திணைக்களம் | 02 |
| 05 | பதிவாளர் திணைக்களம் | 05 |
| 06 | பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 26 |
| 07 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைச்சு | 02 |
| 08 | காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் | 03 |
| 09 | சுற்றுச்சூழல் அமைச்சு | 01 |
| 10 | பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சு | 01 |
| 11 | நில அளவைத் திணைக்களம் | 01 |
| 12 | கைத் தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சு | 03 |
| 13 | மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களம் | 01 |
| 14 | விவசாயத் திணைக்களம் | 06 |
| 15 | கமநல அபிவிருத்தி திணைக்களம் | 03 |
| 16 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 06 |
| 17 | சுகாதார அமைச்சு | 02 |
| 18 | உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு | 08 |
| 19 | கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு | 10 |
| 20 | மாகாண கல்வி அமைச்சு | 26 |
| 21 | ஆட்பதிவுத் திணைக்களம் | 01 |
| 22 | நீதி அமைச்சு | 02 |
| | **மொத்தம்** | 284 |

## ➢ உள்ளகக் கணக்காய்வின் நடவடிக்கைகள்

மாவட்டத்தின் 05 பிரதேச செயலகங்களினதும் அதனோடு இணைந்த ஏனைய திணைக்கள செயலகங்களினதும் கொடுப்பனவு ஆவணங்களைச் செவ்வை பார்த்தல் மறறும் இயக்கக் கணக்காய்வு, முகாமைத்துவ கணக்காய்வு, செயற்பாட்டு கணக்காய்வுகளை மேற்கொள்ளலாகும்.

மாவட்டச் செயலகத்தின் கீழ் இயங்கும் அனைத்து காரியாலயங்களினதும் வரவு இடாப்புக்கள், முன் வேலைத்திட்டம், மாற்று வேலைத்திட்டம், தினக் குறிப்பேடு என்பவற்றைச் செவ்வை பார்த்தல்.

மாவட்டச் செயலக நிர்வாகத்தின் கீழான ஒதுக்கப்பட்ட வாகனங்களின் பராமரிப்பு, எரிபொருட்கள், தின ஓட்டப் பதிவேடு மற்றும் பதிவு அட்டவணை என்பவற்றைப் பரிசீலித்தல். திவிநெகும (மனைப் பொருளாதாரம்) வேலைத்திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் அதனோடு இணைந்த ஆவணங்களைப் பரிசீலித்தல்.

அலுவலகச் சுற்றாடல் கட்டட பராமரிப்பு ஏனைய நிர்வாகத்தின் கீழான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டப்படும் கட்டடங்களின் பயன்பாடுகளை பரிசிலித்தல்.
முகாமை உதவியாளர்களின் கோவைகள் பேணும் முறை, பதிவேடுகள்பேணும் முறை, தளக்கோல அமைப்பு போன்றவற்றை ஆய்வு செய்தல். மற்றும் நிதிப் பிரிவின் காசுப்பத்தகம், சிறு காசுப்பத்தகம், காசாளரின் கொடுப்பனவுப் புத்தகப்பதிவேடுகள், மோட்டார் வாகனத் திணைக்கள இறைவரிப் பதிவேடு, வங்கிச் செலுத்துகைகள் பணம் கட்டும் அறிக்கை என்பவற்றை பரிசீலித்தல்
கிராம அலுவலக காரியாலயங்களின் பரிசோதனை, கிராம அலுவலரின் பயன்பாட்டுக் கோவைகள், செயற்பாடுகள், பொதுசனத் தொடர்பு, வினைத்திறன் என்பவற்றைப் பரிசீலித்தல்

## ➢ வருமான சேகரிப்பு

2012ம் வருடத்தில் மாவட்டச் செயலகத்தினால் பெறப்பட்ட வருமான விபரம் பின்வருமாறு,

| தலைப்பு | தொகை |
|---|---|
| 2002-01-01 | 863,283.03 |
| 2002-02-99 | 1,586,044.94 |
| 2004-01-00 | 4,051,825.57 |
| 2003-02-99 | 4,400.00 |
| 1003-07-03 | 47,400.00 |
| 2003-02-13 | 854,700.00 |
| 2003-99-00 | 3,424,368.82 |
| 2003-02-14 | 8,199,370.00 |
| 2003-02-07 | 1,266,700.00 |
| 1003-07-99 | 17,145.00 |
| 2003-02-06 | 12,475.00 |
| 2002-01-99 | 61,018.56 |
| 1003-07-05 | 400.00 |

## ➢ தேர்தல்கள் நடவடிக்கைகள்

2012ம் ஆண்டின் வாக்காளர் கணக்கெடுப்பு பணிகளும் வாக்கெடுப்புப் பணிகளும் கிராம அலுவலர்கள், முகாமைத்தவ உதவியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேலும் வாக்காளர் இடாப்பு மீளாய்வு பணிகள் 2012.06.01 திகதி ஆரம்பமாகியது. இதன் முன்னேற்பாடாக கிராம அலுவலாக்கான கணக்கெடுப்புப் பணிகளுடன் தொடர்பான போதனா வகுப்பு நடாத்தப்பட்டு பின்னர், கிராம அலுவலர்கள் வீடுகளுக்குச் சென்று கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

குறிப்பிட்ட காலத்தில் பதிவதற்குத் தவறியோருக்காக நவம்பர் மாதம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு உரிமைக் கோரிக்கை விசாரணை மேற்கொள்ளப்பட்டு இணைக்கப்பட்டனர். 2012.12.31 ம் திகதி வாக்கெடுப்பு உத்தியோகத்தரின் பங்களிப்புடன் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேலும் பல்பதிவு சம்பந்தமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இரண்டிற்கு மேற்பட்ட இடங்களில் பதிவு உள்ளவர்களின் விபரங்கள் சீர் செய்யப்பட்டுள்ளது.

## ➢ பதிவாளர் நாயகத் திணைக்கள செயற்பாடுகள்

2012 மாவட்டப் பதிவகத்தால் 4,496 உறுதிகள் பதிவு செய்யப்பட்டதுடன் 4,267 உறுதி இணைப் பிரதிகளும் பெறப்பட்டன.

மேலும் 4,681 விண்ணப்பங்கள் பிரதிகள் பெறுவதற்காகவும் விண்ணப்பங்கள் தேடுதலுக்காகவும் கிடைக்கப்பெற்றன. பதிவு செய்தல் மூலம் ரூபா 12,093/= உம், பதிவேடுகள் தேடுதல் கட்டணமாக ரூபா 52,597.50 உம் இணைப்பிரதிகளில் ஒட்டப்பட்ட முத்திரை கட்டணமாக ரூபா 13,655,332/= உம் கிடைக்கப்பெற்றன.

சிவில் பதிவின் கீழ் 197 விவாகங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் 257 அனுமான வயதுச்சான்றிதழ்களும் வழங்கப்பட்டள்ளன. விவாக, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் மற்றும் அனுமான வயதுச்சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றக் கொள்வதற்காக 4,742 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 8,135 பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான முத்திரைக்கட்டணமாக ரூபா 131,545/= பெறப்பட்டன. மொழி பெயர்ப்பிற்காக 189 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று 269 பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 26,900/= முத்திரைக் கட்டணமாக கிடைக்கப்பெற்றது.

நடாத்தப்பட்ட நடமாடும் சேவை விபரம்

| இல | திகதி | இடம் | அநுசரணை வழங்கிய நிறுவனம் |
|---|---|---|---|
| 01 | 19.02.2012 | ஆண்டாங்குளம் R.C.T.M.S | பிரஜைகள் குழு, மன்னார் |
| 02 | 04.03.2012 | கள்ளியடி G.T.M.S | பிரஜைகள் குழு, மன்னார் |
| 03 | 25.03.2012 | இ.இலுப்பை குளம் G.T.M.S | பிரஜைகள் குழு, மன்னார் |
| 04 | 22.04.2012 | தலைமன்னார் R.C.T.M.S | பிரஜைகள் குழு, மன்னார் |
| 05 | 27.05.2012 | மடு சிங்கள மகா வித்தியாலயம் | பிரஜைகள் குழு, மன்னார் |
| 06 | 17.06.2012 | பெரிய பண்டிவிரிச்சான் R.C.T.M.S | பிரஜைகள் குழு, மன்னார் |
| 07 | 21.07.2012 | கட்டையடம்பன் R.C.T.M.S | UNDP தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாடுகள் அமைச்சு |
| 08 | 26.09.2012 | பிரதேசசெயலகம், நானாட்டான் | UNDP தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாடுகள் அமைச்சு |
| 09 | 18.12.2012 | பிரதேசசெயலகம், முசலி | UNDP தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாடுகள் அமைச்சு |
| 10 | 19.12.2012 | பிரதேசசெயலகம், மாந்தை மேற்கு | UNDP தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாடுகள் அமைச்சு |
| 11 | 20.12.2012 | பிரதேச செயலகம், மன்னார் | UNDP தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாடுகள் அமைச்சு |

- **அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள்**

அனர்த்த முகாமைத்துவ குழுவினால் எமது மாவட்டத்தில் பின்வரும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

1. அனர்த்த தயார்படுத்தல் மற்றும் பதிலிறுத்தல் திட்டம்
2. அனர்த்த குறைப்புத்திட்டம்
3. கருத்தமர்வு மற்றும் பயிற்சிப்பட்டறை
4. இயற்கை அனர்த்த நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டுமான பணிகள்
5. வெள்ள அனர்த்த நிவாரணம்


56 கிராம அலுவலர் பிரிவுகளிலும், 20 பாடசாலைகளிலும் அனர்த்த தயார்படுத்தல் மற்றும் பதிலிருத்தல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அவசர கால திறன் வலுப்படுத்தல் விளக்கமானது உள்ளூர் அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அனர்த்த வேலைகளில் நலன்புரி நிலையங்களாக பொது மண்டபங்கள் 10 தெரிவு செய்யப்பட்டு சகல அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு வடிகால் மற்றும் மதகு உருவாக்கப்பட ரூபா.34 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அனர்த்த குறைப்பு செயற்திட்டத்திற்கு பிறக்டிகல் அக்ஷன் நிறுவனத்திலிருந்து ரூபா.2.6 மில்லியனும், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினூடாக ரூபா.4.2 மில்லியனும் கிடைக்கப்பெற்றது. அனர்த்த பாதிப்பினை குறைப்பதற்காகவும் தடுப்பதற்காகவும் பல பயிற்சிகள் வமங்கப்பட்டுள்ளன.

| பயிற்சி வகை | எண்ணிக்கை |
|---|---|
| மாவட்ட அனர்த்த முகாமைத்தவ குழு உறுப்பினர் பயிற்சி | 03 |
| பிரதேச அனர்த்த முகாமைத்தவ குழு உறுப்பினர் பயிற்சி | 08 |
| கிராம அலுவலர் பிரிவுகளில் அனர்த்த தயார்படுத்தல் கருத்தமர்வு | 196 |
| புாடசாலை மட்ட அனர்த்த தயார்படுத்தல் கருத்தமர்வு | 86 |
| ஊள்ளுராட்சி திணைக்களங்களில் அனர்த்த தயார்படுத்தல் கருத்தமர்வு | 05 |

வெள்ள அனர்த்த நிவாரணத்திற்காக சமைத்த உணவு, உலர் உணவு மற்றும் ஏனைய அவசர பணிகளுக்காக ரூபா 6.0 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. வரட்சியினால் பாதிக்கப்பட்ட கிராமங்களிலுள்ள குடும்பங்களுக்காக குடிநீர் வழங்குவதற்காக ரூபா 1.8 மில்லியனும், குளங்கள் மற்றும் கிணறுகள் அமைப்பதற்காக ரூபா 10 மில்லியனும், குடிநீர் தொட்டிகள் அமைப்பதற்காக ரூபா 4.0 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது.












## 02. கலாச்சார மற்றும் சமூக சேவை

### ➢ கலாச்சார நிகழ்வுகள்

❖ மடுமாதா ஆலய திருக்கேதீஸ்வர ஆலய நிகழ்வுகள்

கடந்த ஆண்டு மடுமாதா ஆலய வருடாந்த திருவிழாவும் திருக்கேதீஸ்வரஆலய மகா சிவராத்திரி நிகழ்வுகளும் சிறப்பான முறையில் நடைபெற்றன. மடுத்திருவிழா ஜூலை மற்றும் ஓகஸ்ட் காலப்பகுதியிலும் சிவராத்திரி நிகழ்வுகள் பெப்ரவரி மாதத்திலும் இடம்பெற்றன. இவ்நிகழ்வில் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பல்லின மக்கள் கலந்து சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



❖ **இந்து சமய பொது அறிவுப்போட்டி**

இந்து சபை கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் 2012.06.09 ம் திகதி மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியிலும், மன்/ அடம்பன் மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றது. 1450 மாணவர்கள் கலந்த கொண்டனர் 24 மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றனர். தேசிய மட்டத்தில் 3 மாணவர்கள் 2012.09.01ம் திகதி இந்து சமய கலாச்சார பணிப்பாளர் தலைமையில் பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பணப்பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.



❖ **புண்ணிய கிராம நிகழ்ச்சித்திட்டம்**

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி. கேமலோஜினி குமரன் தலைமையில் வட்டக்கண்டல் கிராமத்தில் நடைபெற்றது. மன்னார் மாவட்ட அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள், ஆலய நிர்வாகத்தினர் அடங்கலாக 500க்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வுக்கென ரூபா. 55000 செலவிடப்பட்டது.



❖ **அரச நடன விழா**

2012.11.19ம் திகதி மாவட்டச்செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்றது. மன்னார் , நானாட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாடசாலைகள், கலாமன்றங்கள் பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் 4 குழுவினர் வெற்றிபெற்றனர். இக்குழவினர் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்ட போட்டியில் 3 குழுவினர் தெரிவு செய்யப்பட்டு விருதுகளையும் பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.

வெற்றி பெற்றோர் விபரம், பின்வருமாறு.

1. கலார்ப்பனா நாட்டியப் பள்ளி
2. கார்மேல் கலா மன்றம்
3. மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

**பயிற்சி நெறி:-** மேலும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு மன்/சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. 90 அறநெறி ஆசிரியர்கள் பங்கு பற்றினர். வளவாளர்களாக திருமதி வசந்தா வைத்தியநாதன், புலவர் செல்லத்துரை ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர்.

- **சிறுவர் நன்னடத்தை**




வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் மன்னார் மாவட்டத்தில் நன்னடத்தைப் பிரிவினூடாக பல சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாலர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகள், பொருத்தமான நபர் கொடுப்பனவுகள், அவசர உதவிக் கொடுப்பனவுகள், பாடசாலை உபகரணங்கள், மற்றும் திரிபோசாவழங்கல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. விபரம் பின்வருமாறு,

| இல | பிரதேச செயலக பிரிவு | வழங்கப்பட்ட சேவைகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு விபரம் |
|---|---|---|---|---|
| 01 | மன்னார், நானாட்டான் | பாலர் பகல் பராமரிப்பு நிலையத்துக்கான மாதாந்த கொடுப்பனவு | 204 | 142,107.00 |
| 02 | மன்னார், முசலி | பொருத்தமான நபர் கொடுப்பனவு | 19 | 77,500.00 |
| 03 | மன்னார், நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு | பொருத்தமான நபர் கொடுப்பனவு (UNICEF) | 104 | 867,000.00 |
| 04 | மன்னார், மடு, மாந்தை மேற்கு | ஒலி, ஒளி நாடா பதிவு சாட்சிக்காக கொழும்பு சென்றமை, சிவனருள் இல்ல சிறுவர்களை முல்லைத்தீவிற்கு இடமாற்றம் செய்தமை | 25 | 35,959.50 |
| 05 | மன்னார், மடு, மாந்தை மேற்கு | பாலியல் துஸ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களுக்கான உணவு, பிரயாணப் படி | 04 | 21,712.50 |
| 06 | மாவட்ட அலுவலகம் | மாவட்ட அலுவலகப் பராமரிப்பு | - | 77,901.60 |
| 07 | மாந்தை மேற்கு | அவசர உதவிக் கொடுப்பனவு | 01 | 6,000.00 |
| மொத்த செலவினம் | | | | 1,228,180.60 |

## ➢ சமூக சேவை

மன்னார் மாவட்டத்திற்கு சமூக சேவைகள் திணைக்களம் பல பயன்மிக்க சேவைகளை வழங்கிவருகின்றது.





- சுயதொழில் கொடுப்பனவு வழங்கல் மூலம் 176 நபர்கள் பயனடைகின்றனர். இவர்களுக்கென ரூபா 1,845,000/= செலவிடப்பட்டது.
- மாற்றாற்றலுடைய 62 நபர்களுக்கு சுயதொழில் மேற்கொள்வதற்காக யுனிசெப் (Unicef) மூலம் ரூபா 2,480,000/= செலவிடப்பட்டது.
- மாற்றாற்றலுடைய 136 நபர்களுக்கு ரூபா 3000/= வீதம் வழங்கப்பட்டது.
- 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான உதவிப்பணம் 14,145 நபர்களுக்கு ரூபா. 6,353,650/= வழங்கப்பட்டது. அத்துடன் 667 நபர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டது.
- 565,புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கென ரூபா. 351,850/= வழங்கப்பட்டது மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்ட 199 நபர்களுக்கு ரூபா. 66,200/= வழங்கப்பட்டது.





மேலும் சிறுவர், மற்றும் முதியோர் தினக் கொண்டாட்டங்கள் மடு பிரதேசத்தில் விமர்சையாக கொண்டாடப்பட்டது.

## ➢ மாவட்ட விளையாட்டு

2012 ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட விளையாட்டு விழா முசலி பிரதேச செயலகப் பிரிவில் 13.07.2012 ஆம் திகதி முசலி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இப்போட்டிகளின் முடிவில் மன்னார் பிரதேச செயலகம் முதலாமிடத்தையும், மாந்தை மேற்கு பிரதேச செயலகம் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

இவ்வருடத்திற்கான வட மாகாண விளையாட்டு விழா கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் மன்னார் மாவட்டம் மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்டது. மேலும் தேசிய விளையாட்டு விழாவில் வட மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தி மன்னார் மாவட்ட உதைப்பந்தாட்ட அணி இரண்டாமிடத்தை பெற்று வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டது.






## ➢ மோட்டார் போக்குவரத்து

மன்னார் மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் 2012ம் ஆண்டில் தை மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையில் 2752 புதிய வாகனச்சாரதி அனுமதிப்பத்திர (New D.Licence) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. 211 சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பங்கள் புதுப்பித்தலுக்காக (Renewal D.Licence) கிடைக்கப்பெற்றன. 168 இலக்கத்தகடுகள் (Issueing number plate) வழங்கப்பட்டுள்ளன.





மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பரீட்சை நடாத்தப்பட்டு சாரதி அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டது.

## ➢ காணித்திட்டமிடல் அபிவிருத்திச் செயற்பாடுகள்

காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகத்தால் மன்னார் மாவட்டத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டங்களின் மூலம் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றிற்கான நிதியினை காணி அபிவிருத்தி அமைச்சு வழங்கியது. ரூபா 287,000/= கிடைக்கப்பெற்று ரூபா 271,915/= செலவழிக்கப்பட்டது. திட்டங்களாவன,

- ❖ பாடசாலை மட்ட துண்ட மாதிரி காணிப்பயன்பாட்டுத்திட்டம்
- ❖ கிராமிய மட்ட துண்ட மாதிரி காணிப்பயன்பாட்டுத்திட்டம்
- ❖ தரமிழந்த நிலத்தை புனரமைக்கும் திட்டம்
- ❖ பாடசாலை மட்ட காணிப் பயன்பாட்டு விழிப்பணர்வுக் கருத்தரங்கு






## 03. அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றம்

### ➢ திவிநெகும அபிவிருத்தித் திட்டம்

2012ம் ஆண்டில் மன்னார் மாவட்டத்திற்கென திவிநெகும திட்டத்திற்கென (மனைப்பொருளாதாரம்) ரூபா 12,000,000/= நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டு ரூபா 6,782,653.15 செலவு செய்யப்பட்டது.

| இல | விபரம் | நிதி ஒதுக்கீடு | செலவு விபரம் |
|---|---|---|---|
| 01 | விவசாயம் | 3,000,000.00 | 2,902,419.14 |
| 02 | வாழ்வாதாரம்/ மீன்பிடி | 1,000,000.00 | 1,000,626.50 |
| 03 | கைத்தொழில் | 1,000,000.00 | 882,669.50 |
| 04 | கைத்தொழிலுக்கான கண்காட்சி | 1,000,000.00 | 999,909.50 |
| 05 | செலவின செயற்பாடுகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகள் | 1,000,000.00 | 997,028.51 |
| 06 | வாழ்வாதாரம் மற்றம் கைத்தொழில் | 1,000,000.00 | - |
| 07 | திவிநெகும | 4,000,000.00 | - |
| **மொத்தம்** | | **12,000,000.00** | **6,782,653.15** |

மேலும் திவிநெகும கைத்தொழில் கண்காட்சிக்காக ரூபா 2,000,000/= செலிடப்பட்டது. இதன் மூலம் 70,000 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும் விதை உற்பத்தி, பழம் உற்பத்தி, முருங்கை உற்பத்தி போன்ற விவசாயத் திட்டங்களுக்காக 05 பிரதேசங்களுக்கும் மொத்தமாக ரூபா 735,555/= ஒதுக்கப்பட்டு ரூபா 694,353/= செலவிடப்பட்டுள்ளது.

| பிரிவு | விதைப் பொதிகள் | குடும்பங்கள் | பழ விதைகள் | குடும்பங்கள் | முருங்கை விதை | குடும்பங்கள் |
|---|---|---|---|---|---|---|
| மன்னார் | 7,000 | 7,000 | 2,510 | 818 | 1,260 | 260 |
| நானாட்டான் | 4,515 | 4,515 | 3,250 | 2,750 | 1,300 | 500 |
| முசலி | 3,060 | 1,505 | 2,750 | 1,083 | 1,200 | 760 |
| மாந்தை மேற்கு | 5,450 | 1,362 | 2,870 | 748 | 1,510 | 500 |
| மடு | 2,925 | 2,923 | 2,750 | 750 | 1,250 | 500 |
| **மொத்தம்** | **22,950** | **17,307** | **14,130** | **6,649** | **6,520** | **2,520** |

பிரதேசம் வாரியாக மாதுளை, தேசிக்காய், கொய்யா, அம்ரல்லா மற்றும் பப்பாளி மரக்கன்றுகளுக்கான விதைகள் வழங்கப்பட்ட விபரம்

| பழக்கன்று விதையின் பெயர் | மன்னார் | நானாட்டான் | முசலி | மாந்தை மேற்கு | மடு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மாதுளை | 750 | 750 | 750 | 750 | 750 | 3,750 |
| தேசிக்காய் | 500 | 500 | 500 | 500 | 500 | 2,500 |
| கொய்யா | 500 | 500 | 500 | 500 | 500 | 2,500 |
| அம்ரல்லா | 500 | 500 | 500 | 400 | 500 | 2,400 |
| பப்பாளி | 260 | 500 | 500 | 720 | 500 | 2,480 |
| **மொத்தம்** | **2,510** | **2,750** | **2,750** | **2,870** | **2,750** | **13,630** |

வாழ்வாதார மற்றும் மீன்பிடிக்கென ரூபா 512,226.50 செலவிடப்பட்டது.

| பிரிவு | மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை | குடும்பங்கள் |
|---|---|---|
| மன்னார் | 400 | 40 |
| நானாட்டான் | 400 | 40 |
| முசலி | 400 | 40 |
| மா.மேற்கு | 400 | 40 |
| மடு | 400 | 40 |
| மொத்தம் | 2,000 | 200 |

கைத்தொழிலுக்காக ரூபா 499,290/= நிதி ஒதுக்கிடப்பட்டது. இதில் 30 மாற்றாற்றல் உடைய பயிற்சியாளர்களுக்கு பனை அபிவிருத்தி சபை மூலம் பயிற்சியளிக்கப்பட்டது. மன்னார் பிரதேச செயலக பிரிவில் 20 நபர்களுக்கும் நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் 10 நபர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. திவினெகும திட்டத்தின் கீழ் மரமுந்திரிகை உற்பத்திக்காக ரூபா 700,000/= ஒதக்கிடப்பட்டுள்ளது.

| பிரிவு | கன்றுகளின் எண்ணிக்கை | குடும்பங்கள் |
|---|---|---|
| மன்னார் | 1,500 | 300 |
| நானாட்டான் | 500 | 250 |
| முசலி | 1,000 | 14 |
| மா.மேற்கு | 1,300 | 272 |
| மடு | 1,950 | 36 |
| **மொத்தம்** | **5,250** | **872** |

மேலும் திவிநெகும திட்டங்களின் கீழ் உணவு உற்பத்தி, அழகுக் கலை, அபிவிருத்தி நிகழ்ச்சிகள் சேவைகளாக வழங்கப்படுகின்றது. இதன் மூலம் 176 நபர்கள் நன்மையடைந்துள்ளனர்.

- **பன்முகப்படுத்தப்பட்ட பாதீடு**

2012ம் ஆண்டில் மன்னார் மாவட்டத்திற்கு ரூபா. **16,750,000/=** நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது.

| இல | பிரதேச செயலக பரிவு | ஒதுக்கீடு | செலவீனம் |
|---|---|---|---|
| 1 | மன்னார் | 9,007,825.00 | 2,864,171.16 |
| 2 | நானாட்டான் | 2,073,425.00 | 1,675,140.35 |
| 3 | முசலி | 2,881,125.00 | 350,980.51 |
| 4 | மா.மேற்கு | 1,925,675.00 | 892,006.37 |
| 5 | மடு | 610,700.00 | 586,258.00 |
| 6 | மாவட்டத் திட்டமிடல் செயலகம் | 251,250.00 | 19,370.00 |
| **மொத்தத் தொகை** | | **16,750,000.00** | **6,387,926.39** |

## ➢ வடக்கின் வசந்தம்

மன்னாரா் மாவட்டத்தில் 2012 ம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பொருளாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு குளங்கள், வாய்க்கால், மற்றும் ஏனைய தொடா்புடைய புனரமைப்பு வேலைகளுக்கென பொருளாதார அமைச்சினால் ரூபா 10 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு கீழ் வரும் திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

| இல | திட்டத்தின் பெயா் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபா) | செலவீனம் (ரூபா) |
|---|---|---|---|
| 1 | அனைக்கட்டு வான் திருத்த வேலை, நொச்சிக்குளம் | 10,000,000.00 | 367,750.98 |
| 2 | அகத்தி முறிப்பு கால்வாய் திருத்தம் | | 499,896.00 |
| 3 | சாலம்பன் விளாங்குழி கால்வாய் திருத்தம் | | 915,107.60 |
| 4 | வழுங்கல் வாய்க்கால் வெட்டுதல், முள்ளிக்கண்டல் | | 288,435.20 |
| 5 | வீதி திருத்தம், 07 ம் வட்டாரம், எருக்கலம்பிட்டி | | 1,391,181.00 |
| 6 | பொது குழாய் கிணறுகள் (04) அமைத்தல், சன்னாா் | | 1,200,000.00 |
| 7 | பொது குழாய் கிணறுகள் (05) அமைத்தல் , பெரியமடு | | 1,300,000.00 |
| 8 | பொது குழாய் கிணறு அமைத்தல், சின்னபண்டிவிருச்சான் | | 300,000.00 |
| 9 | பொது குழாய் கிணறு அமைத்தல், பாலம்பிட்டி | | 300,000.00 |
| 10 | ஒட்டு சாலம்பன் குளம், கனகராயன் குளம் மற்றும் பண்டாரி இலுப்பை குளம் திருத்தம் | | 1,135,803.50 |
| 11 | வன்னிக்குளம் மற்றும் பூசாரிகுளம் தீருத்தம் | | 825,360.07 |
| 12 | சோலமண்டலகுளம் திருத்தம் | | 387,200.00 |
| 13 | சின்ன வண்ணாகுளம் திருத்தம் | | 284,545.26 |
| 14 | துவரையடி குளம் திருத்தம் | | 385,693.05 |
| 15 | பொது குழாய் கிணறு அமைத்தல், செட்டியாா்கட்டை அடம்பன் | | 300,000.00 |
| 16 | நிா்வாக செலவீனம், நீா்பாசன திணைக்களம் (மத்தி) முருங்கன். | | 22,755.00 |
| 17 | நிா்வாக செலவீனம், மாவட்ட திட்டமிடல் செயலகம், மன்னாா். | | 96,272.34 |
| **மொத்தம்** | | | **10,000,000.00** |

## ➢ சமுர்த்தி அபிவிருத்தித் திட்டம்

2012ம் அண்டில் சமுர்த்தி நிவாரணம் மற்றும் சமுர்த்தி மண் எண்ணை நிவாரணம் வழங்கிய விபரம் கீழ்வருமாறு

| பிரிவு | தலைப்பு | விபரம் | மொத்த ஒதுக்கீடு | செலவு விபரம் |
|---|---|---|---|---|
| மன்னார் | 218-1-1-2-1501(11) | சமுர்த்தி மண் எண்ணை நிவாரணம் | 2,868,000.00 | 2,730,600.00 |
| நானாட்டான் | | | 1,140,000.00 | 1,118,200.00 |
| முசலி | | | 1,572,000.00 | 1,435,400.00 |
| மா.மேற்கு | | | 2,554,800.00 | 2,507,800.00 |
| மடு | | | 3,396,000.00 | 3,342,400.00 |
| **உப மொத்தம்** | | | **11,530,800.00** | **11,134,400.00** |
| மன்னார் | 218-1-1-2-1501(1) | சமுர்த்தி நிவாரணம் | 12,680,000.00 | 12,663,245.00 |
| நானாட்டான் | | | 4,474,200.00 | 4,449,200.00 |
| முசலி | | | 4,174,815.00 | 4,174,815.00 |
| மா.மேற்கு | | | 2,009,465.00 | 2,007,865.00 |
| மடு | | | 4,348,090.00 | 3,261,735.00 |
| **உப மொத்தம்** | | | **27,686,570.00** | **26,556,860.00** |
| **மொத்தம்** | | | **39,217,370.00** | **37,691,260.00** |

## ➢ கிராம அபிவிருத்தி திட்டம்

பெண்களுக்கான சுயதொழிலை உருவாக்கும் நோக்கத்தோடு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக இரு மகளிர் அபிவிருத்தி நிலையங்கள் மன்னார் பட்டினம் பிரதேச செயலாளர் பிரிவிலும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலும் இயங்கி வருகின்றன.

இங்கு

- ✓ தையல் பயிற்சி நெறி - (06 மாதம்)
- ✓ அழகுக்கலையும் மனைப்பொருளியலும்- (03மாதம்) ஆகிய இரு பாடநெறிகள் கற்பிக்கப்பட்டன.

சராசரியாக ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 20 மாணவர்கள் வீதம் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கான கொடுப்பனவுகள் வரவு அடிப்படையில் நாளொன்றிற்கு 100/= வீதம் வழங்கப்பட்டது. இவர்களால் உருவாக்கப்படுகின்ற ஆக்கங்களுக்கு பிரதேச செயலக

மட்டத்திலும் , மாவட்ட மட்டத்திலும் கண்காட்சிகள் நடாத்தப்படுவதுடன் தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் மாகாணமட்டத்திலும் ,அகில இலங்கை ரீதியாக நடைபெறும் "**தயட்ட கிருல்ல**" கண்காட்சியிலும் காட்சிப்படுத்தப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக இரு கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசங்கள் இயங்கி வந்தன.

1. மன்னார் பட்டினம் மகளிர் அபிவிருத்தி நிலையம் 2012ம் ஆண்டில் மாகாண மட்ட போட்டியில் பெற்ற பரிசில்களின் விபரம்

- ✓ றிபன் வேலைப்பாடு : 1ம் இடம்
- ✓ வீட்டு விஞ்ஞானம் : 2ம் இடம்
- ✓ தையல் : 2ம் இடம்
- ✓ புத்தக ஆக்கம் : 2ம் இடம்

2. நானாட்டான் மகளிர் அபிவிருத்தி நிலையம் 2012ம் ஆண்டில் மாகாண மட்ட போட்டியில் பெற்ற பரிசில்களின் விபரம்

- ✓ வர்ணம் பூசுதல் (Painting) : 2ம் இடம்
- ✓ றிபன் வேலைப்பாடு : 2ம் இடம்
- ✓ தையல் : 3ம் இடம்

**இதன் சேவைகள்**

- ✓ பல்கலைகழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களுக்ான புலமைப்பரிசில் வழங்கல்
- ✓ சிரமதானப்பணிகளில் ஈடுபடல் (உ+ம் வைத்தியசாலை, பொது இடங்கள், ...)
- ✓ வேண்டப்படுமிடத்து இலவசமாக கட்டுமானப்பணிகள், திருத்த வேலைகளில் ஈடுபடல்
- ✓ முருங்கன் வைத்தியசாலைக்கு 100 அடி நீளமான சுற்று மதில் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.
- ✓ கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்
- ✓ கிராம / மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களிற்கு சுழற்சி முறையில் கடன் வழங்கப்பட்டது
- ✓ வறிய மாணவர்களிற்கு சப்பாத்துக்கள் வழங்கப்பட்டது.
- ✓ இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது.

## ❖ காணி விவசாயம்

2012ல் மன்னார் மாவட்ட சிறுபோக நெற் செய்கையானது 2,735 ஏக்கர் எதிர்பார்க்கப்பட்டு 3359 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டது. திறைசேரியினால் பெறப்பட்ட நெற்கொள்வனவு முற்பணம் ரூபா.30,000,000/= நிதி கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய அமைப்புக்கள் மற்றும் SPAM நிறுவனத்திற்கும் முற்பணமாக வழங்கப்பட்டு, அறவிடப்பட்டத.

பயிர் உற்பத்தித் திணைக்களத்திற்கென ரூபா 2.16 மில்லியன் ஒதுக்கப்பட்டது. ரூபா 0.858 மில்லியன் மிளகாய் பயிர்ச் செய்கைக்கும், ரூபா 1.185 மில்லியன் நிலக்கடலைச் செய்கைக்கும் செலவிடப்பட்டது.

## பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழான மூலதன வேலைத்திட்டங்கள் - SCAPIN 2010-2012

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 2010ம் ஆண்டு தொடக்கம் 2012ம் ஆண்டு வரை SCAPIN திட்டத்தின் கீழ் 10 வேலைத்திட்டங்களுக்கான ஒதுக்கீட்டுத் தொகை 198.07 மில்லியன் ஆகும். இவற்றுக்கான 31.12.2012 வரையிலான செலவின விபரம் வரமாறு,

| திட்டங்கள் | பிரதேச செயலக பிரிவு | ஒதுக்கீடு (மில்லியனில்) | செலவினம் (மில்லியனில்) |
|---|---|---|---|
| பிரதேச செயலக கட்டடம் | முசலி | 35.00 | 13.12 |
| பிரதேச செயலாளர் விடுதி | | 5.00 | - |
| ஆண் உத்தியோகத்தர் கூட்டு விடுதி | | 9.27 | 2.06 |
| பிரதேச செயலக கட்டடம் | மடு | 35.00 | 27.61 |
| உதவி அரசாங்க அதிபர் விடுதி | | 11.13 | 4.65 |
| ஆண் உத்தியோகத்தர் கூட்டு விடுதி | | 9.27 | 4.63 |
| சுற்றுலா விடுதித் திருத்தம் | | 38.00 | 29.23 |
| பிரதேச செயலக கட்டடம் | மாந்தை மேற்கு | 35.00 | 34.30 |
| உதவி அரசாங்க அதிபர் விடுதி | | 11.13 | 10.56 |
| ஆண் உத்தியோகத்தர் கூட்டு விடுதி | | 9.27 | 7.51 |
| **மொத்தம்** | | 198.07 | 133.65 |











## பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான திட்டங்கள்

### I. மீள் எழுச்சித்திட்டம் – RAP

2012ம் ஆண்டு வரை மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,431.96 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு ரூபா 1,026.03 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இந்நிதியானது,

- ✓ தொழிற்பயிற்சி நிலையம்
- ✓ பலநோக்கு மண்டபங்கள்
- ✓ வீதித் திருத்தங்கள்
- ✓ புது வீதி அமைத்தல்
- ✓ அரிசி ஆலை அமைத்தல்
- ✓ பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கு கடன் வசதி வழங்கள்,
- ✓ குளக்கட்டுக்களை அமைத்தல்,
- ✓ நீர் விநியோகம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 88 கிராமங்களிலுள்ள வறிய குடும்பங்களுக்கு கடன் வசதி வழங்குதல், தொடர்பான தேவைகளை பூர்த்தி செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு இவ் நிதி செலவிடப்பட்டுள்ளது.




கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 05 பிரதேச செயலகங்களிலும் மொத்தமாக 113 கிராமங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.





மேலும் வாழ்வாதார உதவிக் கடன் வழங்கும் பொருட்டு 10,060 நபர்களுக்கு ரூபா 262.87 மில்லியன் ஒதுக்கிடப்பட்டது. கட்டுக்கரைக்குளம் புனரமைப்புக்கென ரூபா 507.53 மில்லியன் ஒதுக்கிடப்பட்டு ரூபா 428 மில்லியன் செலவு செய்யப்பட்டது.



மேலும் உட்கட்டமைப்பு திருத்தத்தின் கிழ் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் திருத்தம் மற்றும் புதிதாக அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் பல பிரதேச செயலக பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

புதிதாக பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல் விபரம்

| பிரிவு | கிராமங்கள் | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| மன்னார் | பரப்பாங்கண்டல் | 2,125,000.00 | 1,847,825.00 |
| முசலி | அரிப்பு,<br>கொக்கு படையான்,<br>பண்டாரவெளி | 6,375,000.00 | 5,543,475.00 |
| மாந்தை மேற்கு | காத்தங்குளம்,<br>ஆண்டாங்குளம்,<br>பரப்பக்கடந்தான்,<br>நெடுங்கண்டல் | 8,500,000.00 | 7,391,300.00 |

பலநோக்கு கூட்டுறவு சங்கம் திருத்தியமைத்தல் விபரம்

| பிரிவு | கிராமங்கள் | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| முசலி | சவேரியார்புரம் | 439,488.00 | 355,606.00 |

## II. மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்து மீள் குடியேற்றப்பட்ட மக்களின் அவசர புனர்வாழ்வு மூலம் அபிவிருத்தி செய்தலுக்கான திட்டம் – MANREP

1. இடம் பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட மக்களின் சமூக பொருளாதார செயற்பாடுகளை மேம்படுத்த ஏதுவாக 2020 ம் ஆண்டு வரையான ஓர் புனர்வாழ்வு திட்டத்தினை அமைப்பதாகும்.
2. ஓர் முன்னோடித்திட்டத்தினை செயற்படுத்தி அதனால் பெறப்படும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஓர் நீண்டகால திட்டத்தினை தயாரிப்பதாகும்.

இந்த முன்னோடித்திட்டம் கிட்டத்தட்ட ரூபா 300 மில்லியன் மதிப்பீட்டுடன் செயற்படுத்தப்படுகின்றது.

70 சிறிய ரக திட்டங்களான குடிநீர், பலநோக்கு மண்டபங்கள், கிராமிய வீதிகள், நீர்ப்பாசன குளங்கள் ஆகியன அமைத்தலாகும்.அத்துடன் சமூக நலத்திட்டங்கள், சேமிப்புக்குழுக்கள் மற்றும் விவசாய மீன்பிடி திட்டங்களை உருவாக்குதல் ஆகும்.








**வரிசைப்படுத்தப்பட்ட அமைச்சுக்களினதும் ஏனைய திணைக்களங்களினதும் செலவின விபரம்**

| இல | அமைச்சு | தலைப்பு | மூலதனச் செலவினம் | மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|
| 01 | புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சு | 101 | 1,000,000 | - |
| 02 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 105 | - | 13,139,100 |
| 03 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 106 | - | 7,884,500 |
| 04 | நீதி அமைச்சு | 110 | 86,900 | - |
| 05 | கமத்தொழில் அமைச்சு | 118 | 1,642,284 | - |
| 06 | சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு | 120 | 1,048,445 | 8,258,405 |
| 07 | பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 121 | 928,000 | 467,084 |
| 08 | சமூக சேவைகள் அமைச்சு | 124 | 488,121 | 6,120,000 |
| 09 | தோழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 133 | 3,389,890 | - |
| 10 | தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 134 | 12,500 | 1,000 |
| 11 | கடற்தொழில் நீர்வள அபிவிருத்தி அமைச்சு | 139 | 29,218,995 | - |
| 12 | மீள் குடியேற்ற அமைச்சு | 145 | - | 2,061,061 |
| 13 | கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு | 149 | 3,347,042 | - |
| 14 | காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | 153 | 50,000 | - |
| 15 | சுற்றாடல் அமைச்சு | 160 | 25,000 | - |
| 16 | அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 173 | 103,700 | - |
| 17 | தொலைத்தொடர்புகள் மற்றும் தொழிநுட்பவியல் அமைச்சு | 185 | 2,977,000 | -- |
| 18 | புத்த விவகாரங்கள் திணைக்களம் | 201 | 100,000 | - |
| 19 | கிறிஸ்தவ சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சு | 203 | 3,458,000 | - |
| 20 | கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | 206 | - | 229,356 |
| 21 | நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் கவனிப்பு சேவைத் திணைக்களம் | 217 | - | 1,236,000 |
| 22 | சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம் | 218 | - | 39,571,970 |
| 23 | தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம் | 252 | 7,241,041 | 533,402 |
| 24 | ஓய்வூதியத் திணைக்களம் | 253 | - | 241,200,000 |
| 25 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | 307 | 50,000 | 356,000 |
| 26 | காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் | 327 | 287,000 | 839,668 |
| 27 | மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் | 328 | 3,160 | 15,352 |